செ.வெ.எண்: 32 / மார்ச் நாள்: 18.03.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு பணிகள்

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் இன்று (18.03.2016) மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை துவக்கி வைத்து பொதுமக்களிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

முதலாவதாக பரமக்குடி அரசு கலைக்கல்லூரி வளாகத்தில் தேர்தல் வாக்குப்பதிவு நாளான மே 16 குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடும் விதமாக மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் கல்லூரியைச் சார்ந்த மாணவ,மாணவியர்கள், "VOTE - MAY 16" என்ற வாசகம் ஏற்படும் படியாக அணிவகுத்து நின்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர். தொடர்ந்து மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாணவ, மாணவியர்கள் அனைவரும் வாக்காளர் உறுதிமொழியினை எடுத்துக்கொண்டனர்.

அதன்பின்பு, பரமக்குடி தலைமை அஞ்சல் அலுவலகத்தில் மாவட்டத் தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்கள்,அஞ்சல் அலுவலகர்கள் மற்றும் ஊழியர்களுக்கு வாக்காளர் விழிப்புணர்வு குறித்து துண்டுப்பிரசுரங்களை வழங்கி தேர்தல் வாக்குப்பதிவு நாளான மே 16 அன்று பொதுமக்கள் அனைவரும் தவறாமல் வாக்களித்திட வேண்டும் என விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

தொடாந்து பரமக்குடியில் உள்ள இண்டேன் (Indane) சமையல் எரிவாயு இரமணா சேமிப்பு நிலையத்தில் உள்ள சமையல் எரிவாயு உருளைகளிலும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகிக்கும் தனியார் நிறுவனத்தில் உள்ள குடிநீர் கேன்களிலும் வாக்காளர் விழிப்புணர்வு குறித்த ஒட்டு வில்லைகளை ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும் பரமக்குடி பேருந்து நிலைய வளாகத்தில் பொதுமக்களுக்கு வாக்காளர் விழிப்புணர்வு குறித்து துண்டுப்பிரசுரங்களை வழங்கியும், மாவட்டத்தில் தேர்தல் தொடர்பான புகார்களை தெரிவிக்க ஏதுவாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் தேர்தல் கட்டுப்பாட்டு அறையின் தொலைபேசி எண் 1800 425 7038 குறித்த விளம்பரம் ஒட்டுவில்லைகளை பொதுமக்கள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் பேருந்துகளில் ஒட்டியும், பேருந்து நடத்துநர்களின் தோள் பைகளில் வாக்காளர் விழிப்புணர்வு குறித்த ஒட்டு வில்லைகளை ஒட்டியும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இந்நிகழ்ச்சிகளில் பரமக்குடி சார் ஆட்சியர் மரு.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., பரமக்குடி அரசு கலைக்கல்லூரி முதல்வர் திருமதி.பார்வதி, பரமக்குடி வட்டாட்சிர் திரு.செய்யதுமுகமது உள்பட அரசு அலுவலர்கள்,கல்லூரி பேராசிரியர்கள்,மாணவர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம் : மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது**